25th February 1955]

IV.—GOVERNMENT BILL.

THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1955.

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, I beg leave to introduce the Madras General Sales Tax (Amendment) Bill ", 1955, and move—

' That the Bill be taken into consideration at once.'

" Sir, I would like to point out that sub-section (1) of section 3 of the Madras General Sales Tax Act, 1939, provides for the levy of sales tax on the sale of goods in respect of the total turn-over of a dealer for each year. Under the Madras General Sales Tax (Turnover and Assessment) Rules, 1939, rules have been framed for the collection of tax in advance even before the end of the financial year. The High Court of Madras has recently held that the provision relating to levy of tax in advance had not been specifically provided for in the Act and that those rules providing for the collection of tax in advance were, therefore, invalid.

" It is proposed to amend the Act so as to specifically authorise the Government to provide for the levy of sales tax in advance. It is also proposed to give retrospective effect to the proposal from the date of commencement of the Act. The Bill is intended to give effect to the above proposals. 9-40 a.m.

" Sir, the practice has been in vogue from the year 1939 till now but owing to the decision of the High Court we have to regularise and make it all right. This is all the object of this Bill."

MR. SPEAKER :—" Motion moved—

' That the Madras General Sales Tax (Amendment) Bill, 1955, be taken into consideration at once.' "

* SRI M. NARAYANA KURUP :—" Sir, the increasing frequency of this kind of legislation to set right judicial decisions is a grave symptom which shows that something is wrong somewhere (A voice : ' Here, not anywhere else '.) Sir, a layman need not be blamed if he suspects that there is a race between the Government and the Judiciary in this matter. Is it that our Judiciary has lost its balance or is it that the Government are losing their legal acumen? It is to be expected that after coming into force of our Constitution and the provision for Fundamental Rights and right of applying for writs, a certain amount of increase in this direction can be expected, but not to this extent.

" Sir, when our Constitution with all its fundamental rights came into force on 26th January 1950, it declared that existing law or that portion of the law, regulations and rules which are repugnant to the fundamental rights are void. This House would like to know what the Government were doing during the last four years. Did

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 11th February 1955.

they or their legal experts examine the existing laws and rules to find out whether any provision or any section was repugnant to the Constitution? I would like to know whether the attention of the Government was drawn to this rule or any other rule or any such amendment was made or suggested in the course of these four years? If that is not, what is the cause of this increasing frequency? As I said it can be only either want of proper scrutiny or want of proper consideration by this House. The democratic chambers are being accused of hasty and ill-drafted legislation and if the facts obtaining here are considered, we rightly deserve that abuse.

"Sir, it may be that a Bill is published before the I's are dotted and T's are crossed and the next day the Bill comes before this House, it goes the third day to the Select Committee which completes its deliberations and on the fourth day it is passed. Nay, that is not all. When this House is considering the Bill and there is a possibility of its being rejected, it is given in the Agenda of the Upper House and that is the courtesy shown to this House and the privelege of that revising chamber. No wonder, such being the case and when we get legislations like this, courts find flaws and again and again the Government have to come before this House with amendments.

"Apart from that, this shows another tendency, that is, the danger of the increasing sphere of delegated legislation. Sir, Jurists and Constitutionalists have expressed their grave anxiety even over the British Parliament and they say, 'the House of Commons are delegating their powers.' That being so, with our Madras Government democracy is not omnipotent. This difficulty is got over thus. If a Bill contains 50 clauses, 49 clauses are prescribed and the 50th will be the 'rules made shall be as valid as if they were enacted in this legislation.' That is what we find now. If an Act comes into force from next day, the Government will begin to issue rules and within three months they would have prescribed enough that would have killed the patient. It is no wonder in examining post-mortem cases, the Judiciary pronounces that it is the prescription that killed the patient.

"We have got adult franchise. Only 21 per cent or 18 per cent of our people are literate. It is quite possible and it is a fact that even illiterate people come to this House. Only a few have knowledge of law and even lawyers must have time to prepare their briefs. Legislation is not like any novel or anything of that kind. It is not enough if Members are given time just to go through it. Even those who want to study it, they must read it again and again, they must digest and then get a mental picture of the whole thing. Because simply one day or one hour is given to this House to go through legislation, it becomes insufficient and the result is what we find today.

25th February 1955] [Sri M. Narayana Kurup]

"Then there is another thing, that is, Bills are now prepared not with that amount of scrutiny and care which used to be bestowed on those things previously. I do not blame the Legal Department. But it is because an impression has been created that in a Democracy with a majority anything can be done. That is the self-righteousness of the majority and so we find under the existing party system, the fate of a Bill is a foregone conclusion. They have got their party, their iron discipline and their whip to whip the Members to vote in a particular manner. Therefore, even in the mind of legal experts, a feeling has been created that it does not matter even if they prepare Bills not with much care, and that it will pass through the Assembly whatever the flaws. I say this is a grave symptom that has to be treated so that the disastrous consequences of it in future to our body politic can be avoided."

* SRI S. PANCHAKSHARAM :—" Mr. Speaker, Sir, the hon. Member Mr. Kurup from the Opposition has come forward with a catalogue of grievances about the way in which things are being done. Incidentally he also paid a compliment—I take it as a compliment—to the way in which we on this side are governed by some discipline and that we are whipped to vote in a particular way. I do not think it is a grievance which can be redressed by any Member of any party. If there is discipline here on this side, I say there is greater discipline, there is stronger iron discipline on the other side. It is necessary. It is essential for the working of any democratic or party system, here or elsewhere.

"The grievance that has been expressed by that hon. Gentleman against this measure—not only this measure, but also against past legislations—seems to be that all essential things that are necessary to be put as main clauses in the Bill itself are made the subject-matter of rules within the rule-making powers of the Government. I do not think it can be a legitimate grievance. Being a lawyer, I will suggest to him to go through the Civil Procedure Code, wherein we have got some 150 main sections that is the Code itself. And then we have got 50 orders elaborating on the main provisions of the Code. Let us take section 94 of the Code which says 'to prevent ends of justice from being defeated', the Court may issue so many interim orders. If that is so, 'to meet the ends of justice' there are several provisions chapter after chapter in the rules relating to injunction, appointment of receivers, attachment before judgment and several other matters, each of which form the subject-matter of rules, but in the main body of the Code there is one section only to 'prevent ends of justice from being defeated, etc.' Similar is the case in any piece of legislation either here or in the Centre. The main provisions that should form the Bill itself are actually put in the Bill and the rest are delegated. It is a matter of procedure. The main provisions are in the Act itself. The method by which the levy should be made and the amounts collected has been relegated to the rules. The Government have been making these rules and amending 9-50 a.m.

[Sri S. Panchaksharam] [25th February 1955

them from time to time when difficulties arise. The rules have been made only to see that the provisions of the Act are properly implemented.

"In this particular case the Government have provided a particular method by which the taxes are to be collected. There are merchants who, anticipating that they are going to be assessed to general sales tax, collect this tax in advance from the consumers and wind up their business in three or four months without paying the amount collected to the Government and thereby defrauding them of their legitimate dues. It is not as if they are out of pocket themselves. It is the sales tax they have collected from the consumers that they want to pocket without paying to the Government. It is in such cases that we have got to safeguard the interests of the Government and see that the money collected in advance from the consumers is not stolen away by any of these merchants.

"Section 18-A of the Income-tax Act specifically provides that the Income-tax Department can levy the tax on the basis of the amount assessed in the previous year and collect it in advance and that if subsequently, the amount collected in advance is found to be in excess of that actually leviable, the assessee is bound to pay only a lesser sum next time and can ask for rebate. A similar provision has not been made in the General Sales Tax Act. That is the difficulty now.

"Now, the hon. Member Sri Narayana Kurup was saying that the legal acumen of this Government had become so fallible that they were not able to look at all questions from all angles. It is not so. Legal acumen is not infallible. When difficulties arise, they have to be set right. The hon. Member also said that the judiciary had lost its value. It is not right. The judiciary is there to safeguard the interests of the people and preserve the fundamental rights of the people. It was not a question of any fundamental right at all that was before the High Court when this particular case was taken up. The simple question that arose for decision by the High Court was this. A tax is being levied. It is provided in the rules that the tax could be collected in advance. This advance collection must have been the subject-matter of the main Act itself. It is a substantive portion which cannot form the subject-matter of the rules. Therefore, the rules are *ultra vires* of the Government. This was the simple question on which the High Court was called upon to give a decision. The High Court said that these rules were repugnant to the main provisions of the Act itself and that, therefore, the advance collection of sales tax was wrong. On account of this, the Government have come forward with a measure to see that a provision similar to the one in section 18-A of the Income-tax Act, is made in the General Sales Tax Act. There is nothing wrong about this measure. Therefore, even if the hon. Member Sri Narayana Kurup has got any grievance about other pieces of legislation, let him not have any grievance in regard to this measure. I request

25th February 1955] [Sri S. Panchaksharam]

him to support this measure and not to attack so lightly the provisions of a measure relating to the collection of sales tax which forms the mainstay of our financial structure.''

* SRI M. NARAYANA KURUP :—'' On a point of personal explanation, Sir. I never suggested that the judiciary had lost its balance. In fact, that is the one department which I respect. I did not also say that the legal acumen of the Government had deteriorated. I only said that the circumstances were such that they did not care to exercise their legal acumen.''

* SRI S. RAMALINGAM :—'' கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது சபை முன்பு இருக்கக்கூடிய மசோதாவிலிருந்து என்ன தெரிகிறது என்றால் சர்க்கார் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதுதான். இதைப்பற்றி எதிர்க்கட்சியில் இருக்கக் கூடிய நாங்கள் பல தடவைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதாவது இந்த சர்க்கார் 'சட்டசபையை புறக்கணிக்கிறது, ரூல் மேகிங் பவர் மூலம், தங்களுக்கு விதிகளை இயற்றுவதற்கு அதிகாரம் இருக்கிறது என்பதை வைத்துக் கொண்டு சட்டசபையை புறக்கணிக்கிறார்கள் என்பதை நாங்கள் பல தடவை எடுத்துக்கூறியிருக்கிறோம். விதிகளை சர்க்கார் செய்யலாம் என்று சட்டசபை சர்க்காருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறது என்பதை வைத்துக்கொண்டு சர்க்கார் பல காரியங்களைச் செய்து வருகிறார்கள்' என்று சொல்லி வந்திருக்கிறோம். சட்டத்திற்குப் புறம்பாக சர்க்கார் அதிகாரத்தை எடுத்துக்கொண்டு சட்டங்களைச் செய்து வருகிறார்கள் என்று ஹைக் கோர்ட்டே தீர்ப்புக்கொடுத்திருக்கிறார்கள். அதையும் ஸ்பஷ்டமாக தங்களுடைய தீர்ப்பில் அவர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இதையே தான் நாங்களும் அடிக்கடி வற்புறுத்திக் கூறியிருக்கிறோம். 9-56 a.m.

'' எந்த மசோதாவைக் கொண்டு வந்தாலும் சர்க்கார் அதில் ஒரு விதியைச் சேர்த்துக்கொண்டு பல காரியங்களை சட்டசபையைக் கேட்காமலேயே செய்து கொண்டு வருகிறார்கள். மசோதாவைக் கொண்டு வந்து சட்டசபையின் முன்பு வைக்கிறார்களே தவிர மற்ற விதிகள் செய்வதை சட்டசபையின் முன்வைப்பது இல்லை. அப்படி சட்டசபையின் முன்பு வைத்து அவைகளை சட்டசபை அங்கீகாரம் செய்வதாகவே இல்லை. எந்த மசோதாவைப் பார்த்தாலும் தங்களுக்குள்ள ரூல் மேகிங் பவரை வைத்துக்கொண்டு இந்த மாதிரி யெல்லாம் காரியங்களைச் செய்து கொண்டு வருகிறார்கள். ஏதாகிலும் சந்தேகம் ஏற்பட்டால் அதை புரிய வைப்பதற்கும் அதை விளக்கி வைப்பதற்கும் சட்டசபைக்கு அதிகாரம் உண்டு. அதன்படி நாம் விதிகள் செய்வதற்கும் அதிகாரம் உண்டு. அப்படி நடத்தாமல் தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை வைத்துக்கொண்டு விதிகளைச் செய்து வருகிறார்கள். அதனால் பல தகராறுகள் ஏற்படுகின்றன. அப்படி தகராறுகள் ஏற்பட்டால் அல்லது சந்தேகங்கள் ஏற்பட்டால் அதை விளக்க சட்டசபையில் வைக்க வேண்டும். அப்படி இப்பொழுது வைப்பது இல்லை. அப்படி வைத்தால் தான் ஜனநாயகத்திற்கு மதிப்பு உண்டு. ஜனநாயகம் என்று சொல்லிக் கொண்டு சட்டசபையில் மசோதாக்களை கொண்டு வந்து அவைகளை நிறைவேற்றிவிட்டு தங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு விதிகளைச் செய்தால் அது ஜனநாயகம் ஆகாது. அந்த ஜனநாயகம் பேச்சளவில்தான் இருக்கும். சர்க்காரின் சர்வாதிகாரத்தை வைத்துக்கொண்டு செய்ததாகத்தான் ஆகிறது. சர்க்கார் அப்படி சர்வாதிகாரத்தை வைத்துக்கொண்டு காரியங்களைச் செய்கிறது என்பதற்கு இது ஒரு அத்தாட்சி. அதை இந்த மசோதாவே நிரூபித்துக் காட்டுகிறது. அதனால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதில் அர்த்தம் இல்லை.

'' எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் தங்களுடைய கட்சியில் கட்டுப்பாடும் பொறுமையும் இருப்பதாக பெருமைப்பட்டுக்கொண்டார். அதை நாங்கள்

ஒத்துக்கொள்ளுகிறோம். அதைப்போலவே எல்லாக் கட்சிகளிலும் கட்டுப்பாடு இருக்கிறது. ஆனால் அந்தக் கட்டுப்பாடு கொள்கை அளவில் இருக்க வேண்டும். ஆனால் இப்பொழுது சர்க்கார் எற்படுத்தும் விதிகளை கோர்ட்டு மதிப்பதில்லை. ஏன்? சர்க்கார் தங்களுக்குள்ள அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்று அவர்கள் கருதுகிறார்கள். இதைப் பற்றி நாங்களும் எற்கெனவே சொல்லியிருக்கிறோம். ஏற்கெனவே இப்படிப்பட்ட ஒரு மசோதா வந்தது. விற்பனை வரி சம்பந்தப்பட்ட மசோதா அது. அதன்படி இவர்கள் வசூலித்த விற்பனை வரியை திருப்பிக்கொடுக்க வேண்டும் என்று தீர்ப்புக் கூறினார்கள். அப்பொழுதும் நாங்கள் இதை எடுத்துக் கூறினோம். தங்களுடைய கட்சியில் மெஜாரிட்டி பலத்தை வைத்துக்கொண்டு அந்த மசோதாவை நிறைவேற்றினார்கள். எந்த மசோதாவைக் கொண்டு வந்தாலும் தங்களுடைய மெஜாரிட்டி பலத்தை வைத்துக்கொண்டு நிறைவேற்றலாம் என்று துணிச்சலாக அப்படி செய்து வருகிறார்கள். கோர்ட்டார் அவர்கள் எந்த விதி செல்லாது என்று தீர்ப்பளித்துவிட்டார்களோ அந்த விதியையே செல்லுபடியாக்க இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்படுகிறது. ஆகவே தான் சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய இந்த நடவடிக்கையை நான் கண்டிப்பதற்கு விரும்புகிறேன்.

10 a.m.

"இப்பொழுது சர்க்கார் கொண்டுவந்திருக்கக்கூடிய திருத்த மசோதாவின் முக்கிய அம்சம் என்ன? 1939-ம் வருஷ விற்பனை வரி சட்டத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட விதிகளைக்கொண்டு வியாபாரிகள் அந்தந்த வருஷத்திற்குக் கட்டவேண்டிய வரியை முன் கூட்டியே கட்டிவிடவேண்டுமென்று சொல்லப்பட்டது. சட்டத்திற்கு விரோதமானது என்று ஹைக்கோர்ட் தீர்ப்பளித்துவிட்டது. ஆகவே இந்த மசோதாவின் மூலம் பத்து வருடங்களாக நாம் முன் கூட்டியே வசூலித்துக் கொண்டிருந்தது செல்லுபடியாகும் என்றும், இனிமேல் ஒவ்வொரு ஆண்டும் கட்ட வேண்டிய மொத்த வரியை முன்பணமாகவே மாதாமாதம் அல்லது மூன்று மாதத்திற்கு ஒரு முறை வியாபாரிகள் கட்டிவிடவேண்டுமென்றும், அதற்காக வியாபாரிகள் மூன்று மாதத்திற்கு ஒரு முறை விற்பனை வரி அதிகாரிகளிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்த வருஷம் கட்டவேண்டிய வரியை இவ்வாண்டே முன் பணமாக கொடுக்கவேண்டுமென்பதற்கு சபையின் அங்கீகாரம் கோரப்படுகிறது. ஆனால், clause 2 says—

'. . . for that purpose a dealer may be required to furnish either an advance estimate of his turnover for the year, or periodical returns of the actual turnover as may be prescribed.'

என்று கொடுக்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவேண்டும். அதாவது அடுத்த ஒரு வருஷத்திற்கு வியாபாரம் என்ன ஆகும் என்று வியாபாரிகள் இவ்வருஷத்திலேயே யோசனை பண்ணி, ஜோஸ்யம் பார்த்து விற்பனை வரி அதிகாரிகளுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்றால் இது சாத்தியமான காரியமா? ஒரு வருஷத்திற்கு ஒரு தடவை கணக்குகளை எடுத்துக் கொண்டு வியாபாரிகள் விற்பனை வரி அதிகாரிகளிடம் போகும்பொழுது வியாபாரிகளைக் குற்றவாளிகள் போல, பொய் சொல்லி ஏமாற்றக் கூடியவர்களைப் போல மிகக் கேவலமான முறையில் அதிகாரிகள் நடத்துகிறார்கள். அப்படியிருக்கும்பொழுது மூன்று மாதத்திற்கு ஒரு முறை கணக்குகளைக் கொண்டுபோய் அவர்களிடம் கொடுக்க வேண்டுமென்றால் இது சாத்தியமான காரியமா? இதனால் வியாபாரிகளுக்கு எவ்வளவு தொந்தரவு ஏற்படுமென்று சொல்லமுடியாது.

"விற்பனை வரியை நம் சர்க்கார் 'காமதேனு', என்று சொல்லலாம். ஆனால் கனம் மந்திரி அவர்கள் ஓரிடத்தில் பேசும்பொழுது 'பொன் முட்டையிடும் வாத்தை அறுக்கக் கூடாது' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பொன் முட்டையிடும் இந்த வாத்தை அவர்கள் அறுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். இதிலிருந்து மேலும் மேலும் ஒரு நாளில் எவ்வளவு அதிக வருமானத்தைப் பெறமுடியும் என்றே கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வியாபாரிகள் கண்யமான முறையில், கௌரவமான வகையில் விற்பனை வரி சம்பந்தமான கணக்கை

25th February 1955] [Sri S. Ramalingam]

எடுத்துக்கொண்டு விற்பனை வரி அதிகாரிகளின் ஆபீசுக்குச் செல்லும்பொழுது நடத்தப் படுவார்களேயானால் அவர்கள் விற்பனை வரியை முன் கூட்டியே கொடுப்பதற்குக் கூட ஆட்சேபனை பண்ணமாட்டார்கள். ஆனால் இல்லாத தொந்தரவுகள் எல்லாம் அவர்களுக்குக் அதிகாரிகள் கொடுக்கும்பொழுது, இந்த வியாபாரத்தையே ஏன் விட்டுவிட்டு ஓடிவிடக் கூடாது என்று தான் அவர்கள் எண்ணுகிறார்கள். பலர் ஓடியும் இருக்கிறார்கள்.

"ஏற்கெனவேயே ஒரு முனை விற்பனைவரியைக் கொண்டுவரவேண்டுமென்று வியாபாரிகள் பல கிளர்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். உணவு தான்யங்களுக்கு விற்பனை வரியை ரத்து செய்துவிடவேண்டுமென்ற கோரிக்கை ஒருபுறம் இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் அரசாங்கம் கவனிக்கவேயில்லை. அவர்கள் கூட்டியிருக்கிற பல மகாநாடுகளுக்கு கனம் மந்திரி அவர்கள் தலைமை தாங்கியும் இருக்கிறார்கள். பல முனை விற்பனைவரி விதிப்பை ஒழித்துவிட்டு ஒரு முனை விற்பனை வரி கொண்டு வருவது பற்றி யோசிப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது பற்றிய முடிவு எதுவும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் வியாபாரிகளிடமிருந்து முன் கூட்டியே அடுத்த ஆண்டுக்குக் கட்டவேண்டிய வரியை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கட்டவேண்டுமென்று சொன்னால் இது சரியல்ல. அதுவும் கோர்ட்டால் செல்லாது எனத் தள்ளுபடி செய்யப்பட்ட விதியைச் செல்லுபடியாக்க திருத்த மசோதா கொண்டுவருவது கோர்ட்டையே அவமதிப்பதாகும். இனிமேலாவது இந்தமாதிரியான திருத்த மசோதாக்களை சர்க்கார் கொண்டுவரக் கூடாது என்று சொல்லிக் கொண்டு நான் முடித்துக் கொள்ளுகிறேன்."

* SRI K. PARTHASARATHY :—"Mr. Speaker, Sir, I rise to support the principle contained in the Bill. Nobody can seriously question the necessity for the power that is sought to be taken by the Government to legalize what they have been doing for a pretty long time. Some hon. Members found fault with the defect that was found in the legislation which has been in force all along. But, I think, no apology is needed because the legislation had not been questioned so far in this respect. It was only very recently that this lacuna was found out and so we need not make much of the fact that there is this small lacuna. When we find that what we are seeking is only to legalize what we have been doing all along, I do not think that there need be any serious objection to it.

"But there is another principle involved in this Bill, that is, giving retrospective effect. In this connexion, I wish to refer to clause 3 of this Bill. It says—

'The principal Act shall be read and construed as if the amendments made by section 2 had formed part of the principal Act from its commencement.'

I want to know, whether this clause will be valid. I am glad the Advocate-General is here and we will be having his guidance in this matter. I seriously doubt whether the introduction of this clause will also make this piece of legislation repugnant to our Constitution. Because Article 265 of the Constitution says—

'No tax shall be levied or collected except by authority of law.'

Sir, we are now taking power to make advance collections but this also involves the power to punish persons when they default in payment or fail to furnish returns required to be submitted by the other provisions in the General Sales Tax Act. So, if we pass a legislation by including a provision that this Bill shall be deemed

to have come into force on the date when the principal Act came into force, we are taking powers to punish such persons. I submit that this is illegal and is forbidden by the Constitution. Article 20 (1) says—

'No person shall be convicted of any offence except for violation of a law in force at the time of the commission of the act charged as an offence, nor be subjected to a penalty greater than that which might have been inflicted under the law in force at the time of the commission of the offence.'

So, now if we make a provision that this Bill shall be deemed to have come into force on the date when the original Act came into force—in 1939—we will be making such persons liable to punishment for any offence committed by them before this Bill becomes law. According to Article 20, I think it is illegal. I hope the Advocate-General would be able to clear this genuine doubt."

* SRI N. GOPALA MENON :—" Mr. Deputy Speaker, Sir, as I understand the Bill, it is really not for the purpose of curing a defect in the Act or for providing for a lacuna in the Act. This Bill has been brought forward because the old Act did not contain any provision for the purpose of making advance collections. It was done in the Income-tax Act and during the stress and strain of war in 1939 and subsequently the rules which were framed under the Income-tax Act were also adopted in the General Sales Tax Act and advance collections were made. But when the rules were subsequently framed under the Act, those rules did not conform with the original Act and the High Court properly said that the Government had no right to frame rules which were inconsistent with the original Act.

10-10 a.m. " Therefore, what is being done is only to legalize a practice which has been there for several years and I do not think that the hon. Members who said so much that defective draftsmanship are justified at all. But, I am not fully convinced about the other question, namely, the morality behind the Bill.

" Sir, in the Indian Income-tax Act, we have the same provisions. When the Government are in a state of distress or of want and they need money very badly for the purpose of doing things which they cannot refrain from doing and when time is of very great importance to them, they must have with them powers for the purpose of collecting taxes in advance and this was done in the case of income-tax and so also it was done in respect of the sales tax. At a time when there was a war and there were emergencies and difficulties which the State had to face, it was no doubt true that the Government had to take into their hands those powers for collection in advance and the people, as a whole, had to co-operate with the Government in paying what little they could give to the coffers of the Government. But, during normal times, we have to consider whether there is any morality behind collecting as tax in advance what is payable some time later.

" Generally, the tradesman have their accounts settled at the end of the year. What the liabilities are, what the assets are and

25th February 1955] [Sri N. Gopala Menon]

what the outstandings are will all be known only at the end of the year and there may be so many other things which will also have to be adjusted. Therefore, if really the Government collect the tax in advance, it will be a hardship to the trader. If this principle which the Government are adopting in this case is applied also to the general public, I would like to ask, why the people who are in receipt of salaries should not ask for their salaries in advance before they really accrue? There may be certain financial circumstances in which such people may require money earlier. Therefore, I submit, Sir, that on principle it may not be proper or it may not be supportable. I therefore think that the Government should make this collection of tax in advance entirely optional. There are tradesmen who may be willing to pay this tax every month. It will be good riddance for them and the accumulated liability for the year will not accumulate. They may be willing to pay it in instalments instead of keeping it over till the end of the year. I know that there are very many traders who would like to pay off their taxes every month because to that extent their liability is reduced. But, unfortunately, under the rules and in the proposed amendment it is made imperative on the trader to pay this tax monthly and the authorities merely assess what probably would be the sales and what probably the trader would have to pay as tax. On this basis, the tax is being levied. It may be that a trader pays taxes which are not justified by the sales that he may have later in which case he will have to apply for a refund of the money that he has actually paid. It involves time and labour and a great deal of trouble to get back the money which has already been paid. I would, therefore, while supporting the Bill, urge upon the Government to consider earnestly whether, in the proposed amendment or in the rules that they may make, they can make this advance payment purely optional so that if a trader really likes to pay off his tax every month he can do so. Let it not be a compulsory thing. We cannot compel a man to pay a tax which has not really accrued and therefore, if the concerned section of the Act or the rules are so amended as to make the advance payment of this tax optional at the instance of the person who has to pay, there will be a grace and a charm in making this amendment. I therefore appeal to the Government to look at this from this point of view and do the needful."

*SRI N. K. PALANISAMY :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, விற்பனை வரி இலாகாவின் நிர்வாக அறிக்கை (Administration Report) யில் **'Bacause of the general trade depression these is a tendency to evade payment-tax; yet the department continues to turn out good work.'** 10-15 a.m.

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏழு சத விகிதம் இப்பொழுது வியாபாரம் குறைந்திருக்கிறதென்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. சர்க்காருக்கு விற்பனை வரியினால் கிடைக்கக்கூடிய வருமானம் குறைகிறது என்றால் வியாபாரிகளுக்குப் போதுமான வியாபாரம் கிடையாது என்று தான் அர்த்தம். விலைவாசிகள் இறங்கிக்கொண்டு வருவதினால் வியாபாரம் மந்தப் பட்டிருக்கிறது. விவசாயிகளுக்குப் போதுமான வருவாய் கிடைப்பதில்லை. தங்களுடைய தானியங்களை விற்பனை செய்வதன் மூலமாக தங்களுடைய தானியங்களைக் குறைந்த விலைக்கு விற்கவேண்டியிருக்கிறது. எல்லா வியாபாரமும் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. வியா

பாரம் எந்த அளவுக்கு முன்னேறும் என்று சொல்ல முடியாத அளவுக்கு இருக்கிறது. விற்பனை வரியை மாதா மாதம் வாங்கவேண்டு மென்பதற் காகக் கொண்டுவந்திருக்கும் இம்மசோதாவை நான் வன்மையாகக் கண்டிக் கிறேன்.

"இம்மசோதாவில் விற்பனை வரி அதிகாரிகளுக்கு அதிகப்படியான அதிகாரத்தைக் கொடுக்கிறார்கள். விற்பனை வரி அதிகாரி வியாபாரிக ளிடத்தில் சென்று மாதா மாதம் என்ன வியாபாரம் நடந்தது என்று கணக்கிட்டு ரிபோர்ட் செய்யவேண்டும் என்று இருக்கிறது. பொது விற்பனை வரி சட்டத்தின் 8-ஏ பிரிவின் பிரகாரம் நடக்கக்கூடிய அக்கிரமங்கள் நமக்குத் தெரியாததல்ல. வியாபாரிகளை அதிகாரிகளுடைய இஷ்டம்போல் எழுதிக் கொடுக்கச் சொல்வது என்றெல்லாம் நடக்கின்றன. அதாவது, ஒரு வியா பாரிக்கு 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் ஆனால்தான் விற்பனை வரி வாங்கவேண்டுமென்று சட்டம் இருந்தாலும், 7 ஆயிரம் ரூபாய் வியாபாரம் ஆகக்கூடிய வியாபாரி ஒருவரை தனக்குப் பத்தாயிரம் ரூபாய் வரையில் வியாபாரம் ஆனதாக எழுதிக் கொடுக்கும்படி அதிகாரிகளால் அனேக சமயங்களில் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். ஏழு ஆயிரம் ரூபாய் வியாபாரம் செய்திருப்பவனுக்கு பத்தாயிரம் ரூபாய் வியாபாரம் ஆனதாகச் சொல்லி அந்த அளவுக்கு விற்பனை வரி விதிக்கப்பட்டால் அது நியாயமாகாது. அவனுக்கு நியாயம் கிடைக்கவேண்டுமானால் அவன் அப்பீல் ட்ரிப்யுனலுக்குத் தான் போகவேண்டும். அதற்காக அவன் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்தாகவேண்டும். செக்ஷன் 8-ஏ யிலேயே இவ்வளவுதூரம் தொல்லைகளை அதிகாரிகள் கொடுக்கும் போது, இம்மசோதாவின்மூலமாக வியாபாரிகளுக்கு மேலும் தொல்லை கொடுப்பது நியாயமா என்று நான் கேட்கிறேன்.

"வருமான வரி சம்பந்தப்பட்டவரையில் வருஷக் கடைசியில்தான் வசூலிக்கிறார்கள். அதேமாதிரி விற்பனை வரியையும் வருஷத்திற்கொரு தடவைதான் வசூலிக்க வேண்டும். மாதாமாதம், அல்லது மூன்றுமாதங் களுக்கொரு தடவை அதிகாரிகள் வியாபாரிகளிடம் சென்று எவ்வளவு வியாபாரம் ஆயிற்று என்று கணக்கு எடுத்துக்கொள்ளலாமேயொழிய, வசூலிப்பதை வருஷத்திற்கொரு தடவை என்றுதான் வைத்துக்கொள்ள வேண்டும். கனம் அங்கத்தினர் ஸ்ரீ பஞ்சாட்சரம் செட்டியார் அவர்கள் சொன்னார்கள் : 'பொதுஜனங்களிடமிருந்து வியாபாரிகள் வாங்கக்கூடியது தானே இந்த விற்பனை வரி ? வியாபாரிகள் அதைக்கூட கொடுப்பதற்கு என்ன ஆட்சேபனை இருக்கமுடியும் ?' என்று அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் வரி போட்டுவிட்டால் வியாபாரி ஜனங்களிடமிருந்து எப்பொழுதுமே வரி வாங்குகிறார்களா என்று நான் கேட்கின்றேன். ஒரு வியாபாரி பத்து மாதம் வியாபாரம் செய்து, பிறகு கடையைக் கட்டிவிட்டு வீட்டுக்குப் போனாலுங்கூட அந்தப் பணத்திற்கும் வரி வாங்கவேண்டுமென்ற அடிப் படையில் இம் மசோதாவை சர்க்கார் கொண்டுவந்திருக்கிறார்கள். 10 ஆயி
10-20 a.m. ரம் ரூபாய் வியாபாரம் ஆனால்தான் வரி வாங்கவேண்டுமென்றிருக்கிறது. இந்த மசோதா பிரகாரம் இரண்டு மாதத்திற்கு 5,000 ரூபாய் வியாபாரம் ஆனாலும்கூட வரி வாங்கவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதுவும் சட்டத்திற்கு விரோதமானது.

"வியாபாரத்திற்காக வெளியிலே வட்டிக்கு கடன் வாங்கியாக வேண்டி யிருக்கிறது. இதுதவிர கடைக்கு வாடகை, சிப்பந்திகள் செலவு வேறு இருக்கிறது. இதற்குமேல் விற்பனைவரி கொடுத்தாகவேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு வியாபாரிக்கு லாபம் வருகிறதா நஷ்டம் வருகிறதா என்பதை அரசாங்கம் யோசிப்பது கிடை யாது. வியாபாரிகளின் பேரில் போட்ட 1634 கேஸ்களில் 47 கேஸ்கள் இன்னும் பெண்டிங்காக இருக்கின்றன. விற்பனைவரி நிர்ப்பந்தத்தினால் அநேக வியாபாரிகள் ஜெயிலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவருடைய சொத்தும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதெல்லாம் நம் எல் லோருக்கும் தெரியும். இதுமாதிரியான நிலைமையில் 7,000 ரூபாய் இருந் தாலும், 10,000 ரூபாய் இருந்தாலும் இந்த வரி பாதிக்கத்தான் செய் கிறது. 7,000 ரூபாய் போட்டால் அப்பெல்லட் டிரிபுனல் இருந்துசொல்

25th February 1955] [Sri N. K. Palanisamy]

லும்போது இதையெல்லாம் பாதிப்பதாக சொல்லி இருக்கிறது. மேலும் நடுத்தர வியாபாரிகளையும், சிறு வியாபாரிகளையும் பாழ்படுத்தக்கூடிய நிலைமையில்தான் இருக்கிறது. சர்க்கார் வேண்டுமானால் ஒரு மாதத்திற்கொரு தடவையோ மூன்று மாதத்திற்கு ஒரு தடவையோ கணக்குகளை செக் செய்துகொள்ளட்டும்."

* SRI A. RATNAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டசபையில் கொண்டுவருகிற மசோதாவை பொது ஜனங்கள் கட்டாயம் எதிர்ப்பார்கள். ஜனங்களுடைய சுபிட்சத்திற்காகவோ, வியாபாரிகளின் சுபிட்சத்திற்காகவோ தொழிலாளர்களின் சுபிட்சத்திற்காகவோ கொண்டுவருவதாகத் தெரியவில்லை. இன்றைக்கு இந்தச் சட்டம் மூன்றுவது முறையாக திருத்தப்பட்டு கொண்டுவரப்படுகிறது. நீதிமன்றங்களிலே பல தடவை செல்லாது என்று தள்ளுபடியாக்கப்பட்டன. இப்பொழுது புதிய விதிகளுடன் திரும்பவும் சட்டசபைக்கு கொண்டுவரப்படுகிறது. இந்தச் சட்டத்திலாகிலும் மக்களின் சுபிட்சத்திற்கும், நன்மைக்கும் வேண்டிய விதிகளைத் திருத்தி அமைக்கவேண்டும். மறுபடியும் ஹைக்கோர்ட்டுக்கு சென்று ரத்தாகாதபடிக்கு இருக்கவேண்டும். உண்மையில் இந்த அரசாங்கம் நாட்டின் நன்மைக்காக காரியங்கள் செய்யவேண்டுமென்றால் பாட்டாளி மக்களின் துயரத்தையும், சிறு வியாபாரிகளின் கஷ்டத்தையும் போக்கக்கூடிய ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். வியாபாரிகளை முன்னதாக விற்பனைவரி கொடுக்குமாறு இந்த அரசாங்கம் கேட்கிறது. அநியாயமாக வியாபாரிகள் வாட்டி வதைக்கப்படுகிறார்கள். பல வியாபாரிகள் கடன்காரர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வியாபாரம் செய்வதற்கே மூலதனம் போதாமல் இருக்கிறது. அரசாங்கம் எவ்வளவோ பணத்தை 5 ஆண்டு திட்டத்திற்காகவும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காகவும் வாரி இறைக்கிறார்கள். ஆனால் ஒரு வியாபாரி நல்ல நிலையில் வியாபாரம் செய்வதற்கு உதவி செய்வது கிடையாது. வியாபாரிகளை பல முனைகளில் வரி செலுத்தி வருகிறார்கள். வியாபாரம் நடத்துவதில் அதிகாரிகளுக்கு பயந்து கணக்கு வைத்துக் கொள்ளுகிறார்கள். வியாபாரிகள் வைத்திருக்கும் கணக்குகளைப் பரிசீலிக்கும் அதிகாரிகளுக்கு வியாபாரிகளைப்பற்றியோ மக்களைப்பற்றியோ கவலை கிடையாது. வியாபாரிகள் இவ்வாறு அதிகாரிகளால் நிர்பந்தப்படுத்தப்படுவதால் அவர்கள் தப்புக்கணக்கு போட்டு திணிக்கிறார்கள். இதனால் சிறிய வியாபாரிகளும், நடுத்தர வியாபாரிகளும் திணறுகிறார்கள். பெரிய வியாபாரிகளின் அருகில் நெறுங்குவது கிடையாது அதிகாரிகள். பெரிய வியாபாரிகளுக்கு எல்லாவித சலுகைகள் அளிக்கப்படுகிறது. இதனால் எல்லா வியாபாரமும் தாழ்ந்துபோகிறது. சிறிய வியாபாரிகளை அதிகாரிகள் சித்திரவதை செய்கிறார்கள். இச்சிறிய வியாபாரிகளின் கணக்கை ஏற்றுக்கொள்வது கிடையாது. ஆதலால் அந்தச் சிறிய வியாபாரிகள் கோர்ட்டுக்கு போகவேண்டியவர்களாக இருக்கிறார்கள். திருநெல்வேலியில் இதுமாதிரியாக ஒரு வியாபாரியை கணக்கு சரியாக வைத்துக்கொள்ளவில்லையென்று கோர்ட்டுக்கு இழுக்கப்பட்டதால் அந்த வியாபாரி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்யவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் ஓரளவு உயரக்கூடிய சிறிய வியாபாரிகளின் நம்பிக்கையை நாம் குலைக்கிறோம்.

" இது வரையில் இந்த வியாபாரிகள் ஒன்றுகூடி பல மாநாடுகள் நடத்தி தங்கள் குறைகளை தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் அதிகமான வரிகளை வசூலிக்கிறார்கள். பல முனைகளில் வரிகளை வாங்குகிறார்கள். மக்களிடமிருந்து மேலும் மேலும் உயர்த்தி வாங்கிக்கொண்டே போகிறார்கள். எனவே இதற்கு ஒரு திட்டம் வகுக்கவேண்டும். ஒரு பக்கம் எக்ஸைஸ் டாக்ஸ், இன்கம்டாக்ஸ் மத்திய அரசாங்கத்தாரால் விதிக்கப்படுகிறது. இதுமாதிரியாக அரசாங்கம் பல முனைகளில் வரிகளைப் போடுகிறார்கள் ஒரு முனை வரி விதிப்பதற்கு தயங்குகிறார்கள். நீதிமன்றங்களிலே செல்லுபடியாகாதவாறு சட்டத்தை இயற்றக்கூடாது. இதனால் மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் நன்மை ஏற்படவேண்டும், இதை கனம் அமைச்சர் கவனிக்கவேண்டும்.

[Sri A. Ratnam] [25th February 1955

10–30 a.m. "இப்பொழுது இருக்கும் நிலைமையில் வியாபாரிகளுடைய வியாபாரம் அழிந்துவிடும்போல் இருக்கிறது. அநேகமாக 100-க்கு 90 பேர்கள் வியாபாரம் கீழே போய்க்கொண்டிருக்கிறது. வியாபாரமும் வீழ்ந்துகொண்டிருக்கிறது. விற்பனை வரி கட்டுவதற்கு வியாபாரத்தை ரூ. 12,000 க்கு மேல் காட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். தப்புக்கணக்கு காட்டுகிறாய் என்று மிரட்டி அதிகாரிகள் வியாபாரிகளிடமிருந்து அதிகப்படியாக வரியை வசூலித்து வருகிறார்கள். ஆனால் வியாபாரி, தான் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்யவில்லை என்று கணக்குக் காண்பித்து ருசுப்பிக்க கோர்ட்டுக்குப் போகவேண்டியதாக இருக்கிறது. அவ்விதம் நீதி மன்றத்துக்குப் போகக்கூடிய நிலைமையில் சிறிய வியாபாரிகள் இல்லை. நீதி மன்றங்களுக்குப் போவதற்கு வேண்டிய அளவு வியாபாரமும் அவர்களுக்கு நடக்கவில்லை.

"நாம் இப்பொழுது இயற்றும் சட்டங்கள் வியாபாரிகளுக்கு நன்மைகளைச் செய்யக்கூடியனவாக இல்லை. இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவும் அதே மாதிரியாகத்தான் இருக்கிறது. ஆகவே இதை ஒரு செலெக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று நான் கருதுகிறேன். அல்லது ஆட்சி பீடமே இப்பொழுது இருக்கும் சட்டத்தைத் திருத்தி வியாபாரிகளுக்கு நன்மை செய்யக்கூடிய அளவில் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக்கொள்கிறேன்."

*Sri V. BALAKRISHNAN :—"கனம் சபாநாயகர் அவர்களே, கட்சிக் கோட்பாட்டின்படி பேசாமல் தர்ம நியாயமாக இந்த மசோதாவைப்பற்றி பேச முன் வந்திருக்கிறேன். இந்த மசோதாவை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன். இந்த மசோதாவின் எதிர்ப்புப் படலத்தை ஆரம்பித்தது கனம் நாராயண குருப். அவர் ஆத்திரத்தோடும் இரைந்தும் ஏன் பேசினார் என்பதுதான் தெரியவில்லை. அவர் சொல்லிகொண்டதாவது ஒரே ஒரு ஓட்டைதான் இந்த மசோதாவில் இருந்தது. இந்த மசோதாவின் ஆரம்பத்திலிருந்தே அந்த ஓட்டையை சர்க்கார் ஆலோசனைக்காரர்கள் வைத்து விட்டார்கள். அது இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. பத்து வருஷங்களாக அப்படி இருந்த ஓட்டையை சர்க்கார் அதிகாரிகள் இதுவரையிலும் கண்டு பிடிக்கவில்லை என்று குறை கூறினார். வாஸ்தவம். யானைக்கும் அடி சறுக்கும். அதற்கு சாத்தியமும் உண்டு. பத்து வருஷங்களாக கண்டு பிடிக்கவில்லையே என்று சொல்லும் ஸ்ரீமான் நாராயண குருப் அவர்களே இதைக் கண்டுபிடித்திருக்கலாம். அவர் அப்படி கண்டு பிடித்தார்களா என்று கேட்கிறேன். அவர் கண்டு பிடித்து ஏன் சர்க்காருக்கு எழுதவில்லை. அவருடைய **Public acumen** எங்கே போயிற்று? அவர் இதைக் கண்டு பிடித்து காலாகாலத்தில் ஏன் சொல்லவில்லை என்று கேட்கிறேன். அப்படி அவர் சொல்லியிருந்தால் சர்க்கார் அதைத் திருத்தியிருப்பார்களே. இப்படி குறை கூறுவது சரியல்ல. தவறு இருந்திருந்தால் திருத்தவேண்டும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கலாம்.

"அடுத்தபடியாக பேசிய நண்பர் ராமலிங்கம் அவர்கள் அவரைப் போலவே ஆத்திரத்தோடும் ஆவேசத்தோடும் பெரிய சத்தத்தோடும் பேசினார், அப்படி பேசவேண்டியதில்லை. ஆவேசத்தோடும் ஆத்திரத்தோடு பேசி விட்டால் கருத்தை எடுத்துச் சொல்லிவிடுவதாகாது, என்று நான் சொல்லுகிறேன்.

"மேலும் இந்த சட்டத்தினால் வியாபாரிகளுக்கு எந்தவிதமான தீமையையும் விளைவிக்காது. பொது ஜனங்கள் கொடுக்கக்கூடிய வரியை சர்க்கார் வசூலிக்கும்போது அதை முதலிலேயே சர்க்காருக்குக் கொடுத்து விடுங்கள் என்றுதான் இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விதி பத்து வருஷங்களாகத்தான் இருக்கிறது. ஒரு வருஷத்தின் சராசரி விற்பனையை கணக்கிட்டு அதை முன் பணமாகக் கொடுக்கவேண்டும் என்றுதான் இந்த மசோதா கூறுகிறது. ஏற்கெனவே வாங்கிக்கொண்டு வந்த பணத்தை இப்பொழுது இந்த மசோதாவின் மூலமாக கொடுக்கச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே அதற்கு விதி இருந்தது என்று நினைத்து

25th February 1955] [Sri V. Balakrishnan]

அதன்படி கொடுத்து வந்தார்கள். இப்பொழுது சட்டம் மூலமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதற்கு இவ்வளவு எதிர்ப்பு வேண்டியதில்லை என்று நினைக்கிறேன். ஆனால் கனம் ராம லிங்கம் கூறிய ஒரு கருத்தை மட்டும் நான் ஆதரிக்கிறேன்.

"வியாபாரிகள் விற்பனை வரி வசூலிக்கும் அதிகாரிகளிடத்தில் படும் கஷ்டம் அப்படி இப்படி இல்லை. விற்பனை வரியை வியாபாரிகள் கொடுப்பதற்குள் அவர்கள் எவ்வளவோ இம்சை அடையவேண்டியதாக இருக்கிறது. அதிகாரிகள் நடந்துகொள்வதைப் பார்த்தால் அவர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். அவர்கள் வேறு நாட்டிலுள்ள வேறு மனிதர்களுக்குச் செய்ய வேண்டிய சேவைகளை செய்ததாக இருக்கிறது. அப்படி செய்யவேண்டிய சேவைகள் சம்பந்தப்பட்ட ஒரு அம்சம். அதிகாரிகள் துன்பத்தை பொருக்க முடியாமல்தான் விற்பனை வரியை வியாபாரிகள் வெறுக்கிறார்கள். துன்பமில்லாமலிருந்தால், வரி கொடுக்க முணுமுணுக்க மாட்டார்கள். காரணமில்லாமல் முணுமுணுத்தால் வியாபாரிகளுக்கு நாட்டுப்பற்றுதல், மக்கள் ஆட்சி பற்றுதல் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். இந்த வேற்றுமை உள்ளவர்கள் நாட்டுக்கு சொந்தமானவர்கள் அல்ல.

"கனம் ராமலிங்கம் அவர்கள் சொன்ன கருத்தில் ஒரு உண்மை இருக்கிறது. அதையும் நான் தெரியப்படுத்துகிறேன். அதாவது விற்பனை வரியை வசூல் செய்யக்கூடிய உத்யோகஸ்தர்கள் சில சில சமயங்களில் நல்ல முறையில் நடந்துகொள்ளவில்லை என்பதில் உண்மை இருக்கிறது. அதைப்பற்றி கனம் மந்திரி அவர்கள்கூட சென்ற பட்ஜெட் கூட்டத்தில் சொல்லி இருக்கிறார். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வதாகவும் சொல்லியிருக்கிறார். இப்பொழுது வியாபாரிகளிடம் விற்பனை வரி அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால் பெரும் பணக்காரர்களை விட்டுவிடுகிறார்கள், நடுத்தர பணக்காரர்களையும் விட்டுவிடுகிறார்கள். ஆனால் சர்வசாதாரணமாக ஏழையாக இருக்கும், கொஞ்சம் முதல் வைத்து வியாபாரம் செய்யும், செய்ய ஆரம்பித்திருக்கும் சிறிய வியாபாரிகளை அவர்கள் ஹிம்சை செய்கிறார்கள். ஒரு தடவைக்கு பல தடவைகளில் கணக்குப் புஸ்தகங்களைக் கொண்டு வாருங்கள் என்று அலக்கழிக்கிறார்கள். சிறிய வியாபாரிகள் சரியானபடி கணக்குகள் வைத்துக்கொள்வது இல்லை. தானேதான் கடையை நடத்த வேண்டியதாக இருக்கிறது. தானே கணக்கை எழுத வேண்டியதாக இருக்கிறது. தானே விற்பனை வரி காரியாலயத்திற்குப் போகவேண்டியதாக இருக்கிறது. அதனால் தன்னுடைய கடைக் கணக்கை தன்னால் சரிவர எழுத முடிவதில்லை. இப்படிப்பட்ட வியாபாரிகளை வாரம் இரண்டு மூன்று நாட்கள் கச்சேரிக்கு தொடர்ந்து வந்து கணக்குப் புஸ்தகங்களை சுமந்துகொண்டு வாருங்கள் என்று சொன்னால் அவர்களால் எப்படி போக முடியும், பிறகு அவர்கள் தங்கள் வியாபாரத்தை எப்படி நடத்த முடியும் என்பதை யோசிக்க வேண்டும். அப்படி அந்த வியாபாரிகள் கச்சேரிக்குப் போனாலும் கூண்டிற்குள் மூன்று மணி நேரம் கை கட்டிக்கொண்டு நிற்கவேண்டியதாக இருக்கிறது. அது யாரும் சகித்துப் பார்க்கமுடியாத காட்சி. இதை கனம் மந்திரி அவர்கள் தீர்க்க முன் வரவேண்டும்.

"இது மட்டுமல்ல. விற்பனை வரி அதிகாரிகள் பல இடங்களில் முகாம் போட்டுக்கொண்டு சில்லரை வியாபாரிகளை பல இடங்களுக்கு வரச் சொல்லுகிறார்கள். அவ்விதம் வரச்சொல்லி அவர்களுக்கு கார் செலவு, படிச் செலவு முதலிய செலவுகளைச் செய்யச் சொல்லி தொந்தரவு கொடுக்கிறார்கள். இதையும் நிறுத்த வேண்டும். அதனால் கனம் மந்திரி அவர்கள் வியாபாரிகளை கொடுமையாக நடத்தக் கூடாது என்று உத்யோகஸ்தர்களுக்கு உத்தரவு போடவேண்டும்.

"அத்துடன் வியாபாரிகளை வரச்சொன்னால் அவர்கள் வந்த தினத்திலேயே அவர்களுடைய வேலைகளை முடித்து விடுவதில்லை. ஒன்று இரண்டு நாட்கள்கூட டயம் கொடுப்பதில்லை. அடுத்த அடுத்த தினம் வரவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அவ்விதம் காலையில் 10 மணிக்கு வந்தால்

மாலை 5 மணி வரையில் காத்துக்கொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது. அவ்விதம் வந்தவர்களை காக்க வைத்துக்கொண்டிருக்கக்கூடாது என்றும் கண்டிப்பாக ஒரு உத்தரவு போடவேண்டும். ஒரு தினத்தில் ஒரு வியாபாரியை வரச் சொல்லிவிட்டால் அந்த வியாபாரியின் வேலையை முடித்த பிறகுதான் மற்ற வியாபாரிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி இல்லாமல் தினம் 20 அல்லது 25 வியாபாரிகளை வரச்சொல்லிவிட்டு அவர்களை காக்க வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால் ஒரு வியாபாரியை இத்தனை மணிக்கு வரவேண்டும் என்று உத்தரவு போடவேண்டும். அந்த மணிப்படி வந்தால் அந்த வியாபாரியின் வேலையை முடித்துவிடவேண்டும். ஒரு வியாபாரியின் கணக்கை முடித்துவிட்டுதான் மற்ற வியாபாரியின் கணக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். கணக்குப் புஸ்தகங்களை 11 மணிக்கு எடுத்துக்கொண்டுவந்து ஆஜராக வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதிகாரிகள் அந்த நேரத்திற்கு வருவதில்லை. இவ்விதம் பல வகைகளில் வியாபாரிகளுக்கு அதிகாரிகள் தொந்தரவுகள் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட தொந்தரவுகளை வியாபாரிகளால் பொறுக்க முடியவில்லை. இந்த அதிகாரிகள் பெரிய மூட்டைப் பூச்சிகளாக இருக்கிறார்கள். இந்த மூட்டைப் பூச்சிகளை ஒழித்தால்தான் . . ."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"ஒழிப்பது இல்லை. நசுக்க வேண்டும்."

*SRI V. BALAKRISHNAN :—"இந்த மூட்டைப் பூச்சிகளை நசுக்கினால்தான் விற்பனை வரி அதிகாரிகளால் ஏற்படும் தொந்தரவுகளும் கஷ்டங்களும் வியாபாரிகளுக்கு நீங்கும். இவைகள் நீங்கினால் இந்த வரியைக் கட்டுவதில் அவர்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறார்கள். பொது ஜனங்களும் சர்க்காரை ஆதரித்து விற்பனை வரியை எவ்வளவு சுலபமாக வசூலிக்க முடியுமோ அவ்வளவு சுலபமாக வசூலிக்க ஒத்துழைப்பார்கள். ஒத்துழைக்கவும் தயாராக இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை முழு மனதுடன் ஆதரிக்கிறேன்."

*SRI B. K. NALLASWAMI :—"கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரிக்கும் முறையில் நடைமுறையில் ஏற்படுகிற பல சங்கடங்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் வியாபாரிகளுக்கு ஒரு மாறுதலும் இல்லை. முன்பு விதிகளாக இருந்தது. இப்பொழுது சட்டமாக வருகிறது. அவ்வளவுதான் வித்யாசம். "வியாபாரிகள் தேச பக்தியோடு வரி கொடுக்க தயாராக இருக்கிறார்கள், ஆனால் தன்மானத்தை விற்பனை வரி ஆபீசில் இழக்க வேண்டிய நிலைமையில் ரொம்பவும் வருத்தப்படுகிறார்கள்." அது வாஸ்தவம். வியாபாரிகள் அங்கு நேர்மையாக நடத்தப்படுவதில்லை. வியாபாரிகள் திருடர்கள் என்று நினைத்துகொண்டு அவர்களை நடத்துகிறார்கள். அதிகாரிகள் அவர்களிடம் நடந்துகொள்வதைப் பார்த்தால் ரொம்பவும் வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. நாம் வரியை முன்கூட்டியே வாங்கிக்கொள்கிறோம். திருப்பிக் கேட்கும்போதுமட்டும் அந்த மாதிரி அதிகாரிகள் நேர்மையாகக் கொடுப்பது இல்லை. அதே முறையில் அதிகாரிகள் திருப்பிக் கொடுப்பதும் இல்லை. விற்பனை வரி மந்திரியார் பவானிக்கு வந்தபோதுகூட வியாபாரிகள் இதைப்பற்றிய புகார் சொன்னார்கள். சென்ற வருஷம் வசூலித்த வரியை 6 மாதம் 9 மாதம் சென்றும்கூட திருப்பிக் கொடுப்பதில்லை. ஆனால் அடுத்த வருஷ தவணையைக் கொடுப்பதில் கொஞ்சம் தவறுதல் ஏற்பட்டு விட்டால் உடனே அதற்கு பெனல்ட்டி விதிக்கிறார்கள். சர்க்காரிடம் அவர்களுடைய பணம் இருக்கும்போதுகூட அந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்காமலும் அதை இதற்கு ஈடு செய்துகொள்ளாமலும் பெனல்ட்டி விதிக்கிறார்கள். ஆனால் அதற்கு வட்டியும் கொடுப்பது இல்லை. மத்திய சர்க்காரில் வருமான வரி முன் பணமாகக் கொடுத்தால் அதற்கு வட்டி கொடுக்கிறார்கள். அடுத்த வருஷத்தில் 'ரீபண்ட்' செய்யவேண்டிய பணத்தைக்கூட இந்தக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. மறுபடியும் தவணை தப்பாமல் கட்டவேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

25th February 1955] [Sri B. K. Nallaswami]

"சென்ற வருஷத்தில் ஒரு வியாபாரிக்குத் திருப்பித் தரவேண்டிய பணமிருந்தால் அந்தப் பணத்தை இவ்வாண்டு வரிக்கு சரிப்படுத்திக் கொள்வதில்லை. இரண்டாண்டு கழித்து வரவேண்டிய பணத்தை திருப்பி வியாபாரிகளுக்குக் கொடுத்தாலும் வட்டி சேர்த்துக் கொடுப்பதில்லை. ஆனால் வியாபாரிகள் கட்டவேண்டிய பணத்தை ஒரு பத்து நாள் கட்ட கால தாமதம் செய்தாலும் உடனே அதற்குப் பெனல்டி போடப்படுகிறது. இந்த அநீதியான முறையை ஒழிக்க வேண்டும். வியாபாரம் கிடைக்க வில்லை என்று சொல்லி அவர்கள் 6 மாதம் காலதாமதம் செய்கிறார்கள். சில தயாராக இல்லாததால் தாமதமாகிறது. இப்படி வியாபாரிகளுக்கு அதிகாரிகள் கொடுக்கும் தொல்லை கொஞ்ச நஞ்சமல்ல. இதையெல்லாம் அரசாங்கம் நன்கு கவனிக்க வேண்டும். விற்பனை வரி அதிகாரிகள் கொடுக்கக் கூடிய தொல்லை பொறுக்கமாட்டாமல் பல வியாபாரிகள் தாங்கள் வியாபாரம் செய்வதையே நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள், என்று சொன்னால் மிகையாகாது. ஆகவே வியாபாரிகளை கௌரவமாக, கண்ய மாக விற்பனை வரி அதிகாரிகள் நடத்தும்படியாக சர்க்கார் தக்க உத்திரவு களைப் போடவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்." 10-40 a.m.

* SRI K. V. RAMASWAMI :—"கனம் சபாநாயகர் அவர்களே, விற்பனை வரி திருத்த மசோதாவின் மீது பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். முன்பு ஒரு வருஷத்திற்கு ஒரு முறை கணக்குக் கொடுக்க வேண்டுமென்று இருந்ததற்குப் பதிலாக இப்பொழுது மூன்று மாதத்திற்கு ஒரு முறை கணக்குக் கொடுக்க வேண்டுமென்று திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொதுமக்களிடமிருந்து வாங்கக்கூடிய வரியை உடனேயே வியாபாரிகள் அரசாங்கத்திற்குக் கொடுத்துவிடவேண்டுமென்று சொல்வதில் எங்களுக்கு ஆட்சேபனை கிடையாது. ஆனால் ஒரு வருஷத்திற்கு முன் பாகவே பொது மக்களிடமிருந்து வரக் கூடிய வரிப்பணம் என்ன என்பதை உத்தேசமாகக் கணக்கு எடுத்துக் கொடுத்துவிடவேண்டுமென்று சொல்வது அவ்வளவு சரியல்ல. கணக்குகளை அதிகாரிகளிடம் கொடுப்பதற்கு ஆண்டுக்கு ஒரு முறை அதிகாரிகளிடம் வியாபாரிகள் போகும்பொழுதே கண்யமாக நடத்துவதில்லை. கௌரவமாக நடத்துவதில்லை. ஆனால் 'இனி ஒவ்வொரு வியாபாரியும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை சென்று கணக்கைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அவர்கள் படப்போகிற கஷ்டம் எவ்வளவு என்று சொல்ல முடியாது. எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் அதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வியாபாரிகள் இஷ்டப்படி ஒரு வருஷத்திற்கு ஒரு முறைதான் கணக்கு அளிக்க முடியும் என்று சொன்னால் அதை சர்க்கார் ஏற்றுக் கொள்ளவும் வசதி செய்யவேண்டும்.

"சர்க்காரிலுள்ளவர்கள் விற்பனை வரியை 'காமதேனு', என்று சொல்லுகிறார்கள். ஆனால் வியாபாரிகளுக்கு யமதூதராகத்தான் இது காட்சியளிக்கின்றது. இதனால் வியாபாரிகளுக்கு ஏற்படுகின்ற தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர்கள் படுகின்ற கஷ்டத்தின் ஒரு பகுதியையாவது கனம் மந்திரிமார்கள் உணர்ந்திருந்தார்களானால் இந்த மாதிரியான மூன்றுமாதத்திற்கு ஒரு முறை கணக்கைச் சமர்ப்பிக்கவேண்டுமென்பதுபோன்ற திருத்தச் சட்டங்களையே கொண்டு வரமாட்டார்கள்.

"அதோடு கடந்த 1½ ஆண்டுகளாகவே ஒரு மூன்ன விற்பனை வரியைக் கொண்டுவருவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி இந்த மசோதாவில் எதுவும் சொல்லப்படவில்லை. அதோடு மிக சீக்கிரத்தில் அழியக்கூடிய பொருள்களான வெற்றிலை, வாழை இலை முதலியவற்றுக்கு விற்பனைவரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென்று கோரப்பட்டு வருகிறது."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"பட்ஜெட் விவாதத்தில் இவற்றைப் பற்றி பேசலாமென்று கனம் அங்கத்தினருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்."

[25th February 1955

* SRI K. V. RAMASWAMI :—" பட்ஜெட் கூட்டத்திலும் இவற்றைச் சொல்லுகிறேன். இந்த விற்பனை வரி திருத்த மசோதா சபைமுன்பு இருப்பதனால் மிக சீக்கிரத்திலேயே அழியக் கூடிய வெற்றிலை, வாழை இலை போன்றவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

10-45 a.m. * SRI R. KRISHNAN :—" மிஸ்டர் ஸ்பீக்கர், சார், விற்பனைநிகுதிநியமம் ஈ மட்டில் பேதமாதி செய்யால் போரா, ஒரு புதிய நீதியில் பேதப்பெடுத்தணமென்னாண் எனெர அபிப்ராயம். ஈ நியமம் கழிஞ்ஞப்பாவசியம் பேதமாதிசெய்யுப்பால் எளுப்பம் பீஞ்ஞபோகுன்ன சில சாதனங்ளுயெல்லாம் நிகுதியில்நின்ன ஒழிவாக்குகயுண்டாயி. ஹோட்டல் வ்யாபாரத்தெ எடுத்து நோக்கியால், அவிடெ விற்பன நடத்துன்ன சாதனங்ளெல்லாம் எளுப்பம் பீத்தயாயிப்போகுன்னவயாண். ஹோட்டலுடெ ஸ்வாமிமார் வாங்குன்ன சாதனங்ளக்கெல்லாம் வாங்குமோல் விற்பனநிகுதி கொடுக்குன்னுண். ஆ சாதனங்ள் பாகம் செய்யுகழிஞ்ஞால் எளுப்பம் பீத்தயாகுன்ன சாதனங்ளாயி தீருன்ன. அதுகொண்டு ஹோட்டல் கச்சவடம் வளரெ எளுப்பம் நக்கும்வரானிடயுள்ள ஒரு வ்யாபாரமாண். அதிந்மேல் ஊஹம்வக்குகொண்டு முன்கூட்டி நிகுதி வாஸூலாக்குகயாணெங்கில் ஹோட்டல்காரெல்லாம் எளுப்பத்தில் பாப்பாயித்தீரும். ஹோட்டலுடெ ஸ்வாமிமார் ஒரு கார்ட் அச்சடிச்ச் ப்ரதமனெப்பெட்ட மூவ்யமந்ரிக்கும் ஈ ஸபயிலெ சில மெம்பர்மார்க்கும் அயச்சிட்டுண். அதில் பறயுன்னது இங்னெயாண் :—

' விற்பனநிகுதி சாயக்கட, ஹோட்டல் உடமகளெ ஸம்பந்திச்சிடத்தோளம் தீரெ தாங்ஙானாவாத்தாயித்தீர்ந்நிரிக்கயாண். அதினால் அடுத்த ஸாம்பத்திகவர்ஷம் முதல்க்கெங்கிலும் க்ஷணபதார்த்தங்ளெ எளுப்பம் கேடுவன்னேக்கான (perishables) யுடெ ஊநத்தில்பெடுத்தியுகொண்டு சாயக்கட, ஹோட்டல் உடமகளெ விற்பனநிகுதியில் நின்னொழிவாக்கணமென்னு ஆங்ஙளுக்கு வ்யாபாரஸ்தாபனங்ள் நிஷ்க்ஷேம்பூட்டியிடுகயெ நிவ்ருத்தியுள்ளுவென்ன் ஗வர்மேண்டினெ வ்யஸனஸமேதம் அறியிக்கொள்ளுன்ன. "

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Let me make a submission, Sir. The hon. Members are talking about articles which have got to be exempted from assessment to sales tax. But this is a Bill purely with regard to the collection of sales tax. After all, I shall be presenting the Budget to-morrow and the hon. Members will have six days to mention all these things. They should have something at least to mention about the Budget. What is the use of exhausting all this ammunition even now."

SRI R. KRISHNAN :— " விற்பனநிகுதிநியமத்தெ ஈ மட்டில் பேதமாதி செய்யுன்னதினெக்காளும் மறெரு தரத்தில் பேதப்பெடுத்தணமென்னாண் ஞான் ஆவசியப்பெடுன்னது. விற்பனநிகுதிக்கு பகரம் கச்சவடக்காரனெர ஆதாயத்தினேல் நிகுதி கெட்டுகயாணெங்கில் அது நன்னாயிரிக்கும். அதுகொண்டு ஈ பேதமாதி பில்லுதன்னெயும் ஒரு ஸெலக்ரர் கம்மிட்டிக்கயச்ச் ஈ மட்டில்தன்னெயாணோ பேதமாதி செய்யுண்டது என்ன் ஸூக்ஷ்மமாயி பரிசோதிச்சேஷம் இது பாஸ்ஸாக்கியால் மதியென்ன் அபிப்ராயப்பெடுகொண்டு ஞான் நிருத்துன்ன. "

